भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनूभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

---

नई दिल्ली, सुक्रवार, 5 फरवरी, 1999/1921 सका

New Delhi, Friday, 5th February 1999/1921 Saka

புது தில்லி, வெள்ளிக்கிழமை 5, பிப்ரவரி 1999/1921 சக

---


**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**

(சட்டமியற்றுத் துறை)

The translation in Tamil of the Cattle Trespass Act, 1871 (1 of 1871), The Agricultural Produce (Grading and Marking Act, 1937 (1 of 1937) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) Section 2 of the Authoritive Texts (Central Laws) act, 1973 (50 of 1973).

கால்நடை அத்துமீறல் சட்டம், 1871 (1/1871), வேளாண் விளைபொருள் (தரப்படுத்துதல் மற்றும் குறியிடுதல்) சட்டம், 1937 (1/1937), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு, குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியானவாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price : Rs. 10.00

# வேளாண் விளைபொருள் (தரப்படுத்துதல் மற்றும் குறியிடுதல்) சட்டம், 1937

## (சட்ட எண் 1/1937)

[1937, பிப்ரவரி 24]

**வேளாண் மற்றும் பிற விளைபொருளைத் தரப்படுவதற்கும் குறியிடுவதற்கும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.**

வேளாண் மற்றும் பிற விளைபொருளைத் தரப்படுத்துவதற்கும் குறியிடுவதற்கும் வகைசெய்வது உகந்ததாக இருப்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

1. (1) இந்தச் சட்டம், வேளாண் விளைபொருள் (தரப்படுத்துதல் மற்றும் குறியிடுதல்) சட்டம், 1937 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் அளாவுகையும்.

(2) இது இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்

(2) இந்தச் சட்டத்தில், பொருளுக்கு அல்லது தறுவாய்க்கு முரணாக எதுவும் தோன்றினாலன்றி,— விளக்கங்கள்.

(அ) "வேளாண் விளைபொருள்" என்பது, வேளாண்மை அல்லது தோட்டக்கலை விளைபொருள் அனைத்தையும் முழுவதுமாகவோ பகுதியாகவோ அத்தகைய விளைபொருள் எதிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட உணவு அல்லது பருகு பொருள்கள் அனைத்தையும் மற்றும் விலங்குகளின் உரோமங்கள் மற்றும் தோல்களையும் உள்ளடக்கும்;

(ஆ) "கள்ளத்தயாரிப்பு" என்பது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 28இல் அந்தச் சொல்லுக்கு குறித்தளிக்கப்பட்டுள்ள பொருளை உடையதாகும்;

(இ) "பொதியுறை" என்பது, கலம், பெட்டி, கூடை, மேலுறை, தட்டு அல்லது பிற கொள்கலம் எதனையும் உள்ளடக்கும்;

(ஈ) "தரப்பெயர்" என்பது, பட்டியலில் கண்டுள்ள பொருள் ஏதொன்றின் தரத்தையும் குறிப்பிடுவதாக, வகுத்துரைக்கப்பட்ட ஒரு பெயர் என்று பொருள்படும்;

(உ) "தரப்பெயர்க் குறியீடு" என்பது, ஒரு குறிப்பிடப்பட்ட தரப்பெயரைச் சுட்டுவதாக, வகுத்துரைக்கப்படும் ஒரு குறியீடு என்று பொருள்படும்;

(ஊ) பெருள் எதனையும் பொறுத்தவரையில் "தரம்" என்பது, அந்தப் பொருளின் நிலைமையையும் தகுதிநிலையையும் உள்ளடக்கும்;

(எ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஏ) "பட்டியலில் கண்டுள்ள பொருள்" என்பது, இணைப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஒரு பொருள் என்று பொருள்படும்;

(ஐ) ஒரு பொருளானது, அந்தப் பொருளை ஒரு தரப்பெயர்க் குறியீடு குறியிடப்பட்டதாக இருக்குமாயின், அல்லது அத்தகைய பொருளைக் கொண்டிருக்கிற பொதியுறை அல்லது அதனுடன் இணைந்துள்ள பெயர்ச்சீட்டு அவ்வாறு குறியிடப்பட்டதாக இருக்குமாயின், அந்தப் பொருள் ஒரு தரப்பெயர்க் குறியீடு குறியிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும்;

(ஒ) ஒரு பொருளானது,—

(i) அப்பொருள் எந்தத் தரப்பெயருடன் குறியிடப்பட்டிருக்கிறதோ அந்தத் தரப்பெயருக்கென வகுத்துரைக்கப்பட்டுள்ள அந்தத் தரத்தினதாக இல்லாமலிருக்குமாயின்,